பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 10 2025 TUESDAY 7.15 PM
ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மஹாராஷ்ட்ரா, குஜராத், மத்தியப்பிரதேசம், சத்திஸ்கட் மாநிலங்களில் 24 ஆயிரத்து 634 கோடி ரூபாய் மதிப்பிலான பல்தட ரயில் பாதை திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

2. நாட்டின் அரசியல் சாசனம் நமக்கு வழிகாட்டியாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 8 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கரெட்டா தெரிவித்துள்ளார்.

4. இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

5. ஆர்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Dhruv Kapila – Tanisha Crasto இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

மஹாராஷ்ட்ரா, குஜராத், மத்தியப்பிரதேசம், சட்டீஸ்கர் மாநிலங்களில் 24 ஆயிரத்து 634 கோடி ரூபாய் மதிப்பிலான நான்கு பல்தட ரயில் பாதை திட்டங்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களிடம் பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இந்த நான்கு மாநிலங்களில் உள்ள 18 மாவட்டங்களை இணைக்கும் வகையில், 894

கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த புதிய ரயில்பாதைகள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் புதிய இந்தியா தொலைநோக்கு திட்டத்தின் கீழ், நாட்டின் அனைத்துப் பகுதிகளையும் தற்சார்புடையதாக உருவாக்கும் நோக்கிலும், வேலைவாய்ப்பு மற்றும் சுயவேலைவாய்ப்பை அதிகரிக்கும் நோக்கிலும் புதிய ரயில்வே திட்டங்கள் அமையும் என்றும் அவர் கூறினார்.

பிரதமரின் கதி சக்தி தேசிய உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் மூலம், நவீன போக்குவரத்து கட்டமைப்பு மற்றும் சரக்கு போக்குவரத்து கையாளும் திறன் அதிகரிக்கும் என்றும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<>>>>>

நாட்டின் அரசியல் சாசனம் நமக்கு வழிகாட்டியாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அரசு பதவியில் தமது 25வதுஆண்டு தொடக்கத்தை ஒட்டி, சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ள பிரதமர், மருத்துவம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள், மக்கள் நலனுக்காக அதிக அளவில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இந்தியாவை அனைத்து துறைகளிலும் தற்சார்புடைய நாடாக உயர்த்துவதற்கு மத்திய அரசு விரிவான பல சீர்திருத்தங்களை கொண்டு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலட்சிய பாரதத்தை உருவாக்க வரும் ஆண்டுகளில் அர்ப்பணிப்போடும், கடுமையாகவும் உழைக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை நாம் அனைவரும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

குஜராத் முதலமைச்சராகவும், பிரதமராகவும் தாம் மேற்கொண்ட பயணத்தில் தமக்கு கிடைத்துள்ள அனுபவங்கள் என்றும் நினைவுகூரத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

விவசாயிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலத்தில் முதலமைச்சராக இருந்தபோது, வேளாண்மை மற்றும் தொழில்வளர்ச்சி பின்தங்கியிருந்தாகவும், சிறந்த அரசு நிர்வாகம் மற்றும் மக்களின் ஒத்துழைப்போடு அம்மாநிலத்தை தலைசிறந்த அதிகார மையமாக உருவாக்கிக் காட்டியதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலமாக இருந்த குஜராத், வேளாண்மையில் முதலிடத்திற்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொழில் வளர்ச்சியும் அதிக அளவில் மேம்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

2014 ஆம் ஆண்டு தாம் பிரதமராக பொறுப்பேற்றதிலிருந்து, அரசின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகளை தாம் எடுத்ததாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

24 ஆண்டுகாலம் தமது அரசியல் பொறுப்பை சிறப்பாக மேற்கொள்வதற்கு மக்கள் தம்மீது கொண்டுள்ள அன்பும் நம்பிக்கையும் தான் காரணம் என்றும், அதற்காக மக்களுக்கு தாம் நன்றியை தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ஆப்பரேஷன் சிந்தூர் நடவடிக்கை, நமது ராணுவ படைகளிடையேயான ஒருங்கிணைப்பின் வலிமை மற்றும் பாதுகாப்பு உத்திகளை வெளிப்படுத்தியிருப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில், தேசிய ராணுவ கல்லூரியில் பயிற்சி பெற்ற இளம் அதிகாரிகளிடையே அவர் இன்று உரையாற்றினார்.

இதன்மூலம், எல்லைக்கு அப்பால் உள்ள தீவிரவாத கட்டமைப்புகளை இந்திய ராணுவம் தகர்த்ததாக அவர் கூறினார்.

இந்தியாவின் முப்படைகளும் தொழில்நுட்ப ரீதியாக மாற்றியமைக்கப்பட்டு வருவதாக திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<>>>>>

குடியரசு துணைத்தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான திரு சி பி ராதாகிருஷ்ணன், மாநிலங்களவையின் அனைத்துக்கட்சி அவைத்தலைவர்களுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

மாநிலங்களவைத் தலைவராக பொறுப்பேற்ற பின் முதல் முறையாக அவைத்தலைவர்களை அவர் சந்தித்து பேசினார்.

அவை நடவடிக்கைகளை சுமூகமாக நடத்தி செல்வது, விவாதங்களில் ஆக்கப்பூர்வமான கருத்துக்களை பகிர்ந்துகொள்வது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்தும் இடையூறு இன்றி அவையை நடத்தி செல்வதற்கு ஒத்துழைப்பு அளிப்பது குறித்தும் அவர்களுடன் திரு சி பி ராதாகிருஷ்ணன் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில், அவை முன்னவர் திரு ஜே பி நட்டா, இணையமைச்சர்கள் டாக்டர். எல். முருகன், திரு அர்ஜுன் ராம் மெக்வால், காங்கிரஸ் அவைத்தலைவர் திரு பிரமோத் திவாரி, திமுக அவைத்தலைவர் திரு திருச்சி சிவா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 8 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. பபித்ரா மார்க்கரெட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் உலக பருத்தி தின விழாவில் உரையாற்றிய அவர், நாட்டின் ஜவுளித்துறை பருத்தி விவசாயத்தை அடிப்படையாக கொண்டு செயல்பட்டு வருவதாக கூறினார்.

இந்திய வேளாண் விஞ்ஞானிகள் அதிக திறன் கொண்ட பருத்தி ரகங்களை உருவாக்கி வருவதாக திரு. பபித்ரா மார்க்கரெட்டா தெரிவித்தார்.

<<<<<>>>>>

ஹரியானா, மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் தீயணைப்புத்துறையை நவீனமயமாக்க, தேசிய பேரிடர் மீட்பு நிதியாக 903 கோடி ரூபாயை மத்திய அரசு அனுமதித்துள்ளது.

உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தலைமையிலான உயர்மட்டக் குழு, ஹரியானாவுக்கு 117 கோடி ரூபாயும், மத்தியப் பிரதேசத்திற்கு 397 கோடி ரூபாயும், ராஜஸ்தானுக்கு 388 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளது.

அஸ்ஸாம் மற்றும் குஜராத் மாநிலங்களில் கடந்த 2024ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு 707 கோடி ரூபாயும் அனுமதித்துள்ளது.

இதுதொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இயற்கை சீற்றங்கள் பேரிடரால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு மத்திய அரசு தோளோடு தோள் நின்று உதவிக்காரம் நீட்டி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் மட்டும் மத்திய அரசு, மாநில பேரிடர் நிவாரண நிதியாக 13 ஆயிரத்து 603 கோடி ரூபாய் அனுமதித்துள்ளதாகவும், தேசிய பேரிடர் மீட்பு நிதியாக 12 மாநிலங்களுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாயை அளித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

தென்னாப்பிரிக்காவின் Kwazulu Natal மாகாணத்தில் இன்று தொடங்கி வரும் 10ஆம் தேதி வரை நடைபெறவுள்ள ஜி.20 எரிசக்தி மாற்றங்கள் தொடர்பான மாநாட்டில் மத்திய எரிசக்தி துறை அமைச்சர் திரு. மனோகர் லால் பங்கேற்கிறார்.

இதுதொடர்பாக, எரிசக்தித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், உலகின் முன்னணி பொருளாதார நாடுகளின் எரிசக்தி துறை அமைச்சர்கள் இதில் பங்கேற்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி பாதுகாப்பு, நிலையான தொழில் வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு தலைப்பிலான ஆலோசனைக் கூட்டங்களில் அமைச்சர் திரு. மனோகர் லால் பங்கேற்கவுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பீகாரில் சட்டப்பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் ராஷ்ட்ரிய ஜனதா தள் தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணியும் வேட்பாளர்களை இறுதிசெய்யும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

பிஜேபியின் பீகார் மாநில தேர்தல் பொறுப்பாளர் திரு. தர்மேந்திர பிரதான், கூட்டணி கட்சித் தலைவர்களான திரு. சிராக் பஸ்வான், திரு. ஜித்தன்ராம் மாஞ்சி உள்ளிட்டோருடன் தொகுதி பங்கீடு குறித்து ஆலொசனை மேற்கொண்டார்.

இதுதொடர்பாக ஓரிரு நாட்களில் இறுதி முடிவு எட்டப்படும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் டாக்டர் திலிப் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ராஷ்ட்ரிய ஜனதா தள் கட்சியின் மூத்த தலைவரும், எதிர்க்கட்சி கூட்டணி ஒருங்கிணைப்பாளருமான திரு. தேஜஸ்வி யாதவ், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்களுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சு நடத்தினார்.

பீகாரில் முதல்கட்டமாக 121 தொகுதிகளில் நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் வரும் 10ஆம் தேதி தொடங்குகிறது.

<<<<<>>>>>

இயற்பியலுக்கான நோபல் பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் John Clark, John Martinis மற்றும் Michel Devoret ஆகியோருக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

மின்சார சர்க்யூட் பற்றிய ஆராய்ச்சிக்காக அவர்களுக்கு இது வழங்கப்படுகிறது.

<<<<<>>>>>

காஸா பகுதியில் அமைதியை கொண்டு வர இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர் இரண்டாவது நாளாக இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

காஸாவில் போர் நிறுத்தத்திற்கு அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கொண்டு வந்த திட்டத்தின் அடிப்படையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

இதனிடையே, காஸாவில் ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்திருக்கும் இஸ்ரேலிய பிணைக் கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அண்டோனியோ குட்ரஸ் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>

ஆர்டிக் ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் *Duruv Kapila – Tanisha Crasto* இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

பின்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், கலப்பு இரட்டையர் பிரிவில் இந்த இணை, 21-9, 21-7 என்ற செட் கணக்கில், பிரான்சின் *Lucas Renoir – Camille Pognante* இணையை வென்றது.

<<<<<END>>>>>